# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க,
# சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டம்

---

*[1992, யூலை மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1992, யூலை மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 3.30 தபாற் செலவு: ரூபா 3.10

## 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டம்.

[1992, யூலை மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 41/90

**புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணியகமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், கனிப்பொருட்களை அகழ்தலையும் தோண்டுதலையும் ஏற்றியிறக்குதலையும் பதனிடுவதனையும் விற்பனை செய்தலையும் ஏற்றுமதி செய்தலையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களத்தின் பணிகளை அத்தகைய பணியகத்திற்கு மாற்றுவதற்கும்; (211 ஆம் அத்தியாயமான) உப்புக் கட்டளைச் சட்டத்தையும் 1968 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க இளர்மின் விசு கனிப்பொருட்கள் சட்டத்தையும் 1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தையும் நீக்கஞ்செய்வதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

### பாகம் I

### புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணியகத்தைத் தாபித்தலும் அதன் தத்துவங்களும் பணிகளும்

2. (1) இதனகத்துப் பின்னர் "பணியகம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணியகம் என அழைக்கப்படவேண்டிய பணியகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணியகத்தைத் தாபித்தல்.*

(2) பணியகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றையும் உடையதாக இருத்தலும் வேண்டும், அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. பணியகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும், 4 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான முறையில் நியமிக்கப்பட்ட முகாமைச் சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்திற்காக முகாமைச் சபையானது பணியகத்தின் எல்லாத் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கலாம் அத்துடன் புரியலாம் *பணியகத்தின் முகாமைச் சபை.*

முகாமைச் சபையின் உறுப்பினர்கள்

4. (1) இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும் முகாமைச் சபையானது பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) புவிச்சரிதவியலில், சுரங்கத்தொழிலில் அல்லது தொழில் முகாமையில் அறிவைக் கொண்டுள்ளவர்களென அமைச்சருக்குத் தோன்றுகின்ற ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் ;

(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனை கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(இ) ஆறும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கப் பணிப்பாளர்.

(2) ஆள் ஒருவர், அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபையொன்றின் அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது உறுப்பினராக வந்தால், சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்து இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, உடற்குறைபாடு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக விருப்பின், அமைச்சரானவர், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென இன்னுமொரு ஆளை நியமிக்கலாம்.

(4) அமைச்சர், அதற்கான காரணம் எதனையும் காட்டாது (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட, சபையின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். சபையின் அத்தகைய எவரேனும் உறுப்பினரை அகற்றுதலானது நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் ஒன்றின் மூலம் சபையிலிருந்து பதவி துறக்கலாம்.

(6) நான்காம் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகவிருத்தல் வேண்டும்:

ஆயின் பதவி துறந்த அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்கிய உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) காலம் கழிதலினால் பதவியை வறிதாக்குகின்ற, சபையின் உறுப்பினர் எவரும், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(8) (அ) அமைச்சரானவர், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களிடையேயிருந்து சபையின் தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் ஒன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(இ) அமைச்சரானவர், அதற்கான காரணம் எதனையும் காட்டாது தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகையானது நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(ஈ) இவ்வுட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) எனும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலமானது, சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

தவிசாளரும், தொழிலைக் கொண்டு நடாத்துதலும்.

5. (1) தவிசாளர், அவர் சமூகமாயிருக்கும் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை வகித்தல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதவிடத்து அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்திருக்கும் உறுப்பினர்கள் தம்மிடையேயிருந்து இன்னுமொரு உறுப்பினரை அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கெனத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்றாகவிருத்தல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தின்போது, தவிசாளர் தமது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினதும், மற்றைய ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் தொழிலைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பிலும் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணிப்பாளர்

6. (1) அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடன், புவிச்சரிதவியல் விஞ்ஞானியாக அல்லது சுரங்கத் தொழில் பொறியியலாளராக ஆகக் குறைந்தது பத்து வருட உயர்தொழில்சார் அனுபவத்தையும் அத்துடன் வேறு விதித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் கொண்ட ஆள் ஒருவரை, புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும்.

(2) இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் புவிச்சரிதவியல் அளவீட்டு சுரங்கங்கள் பணிப்பாளர், பணியகத்தின் பிரதான தொழில்நுட்ப அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், கொள்கை பற்றிய கருமங்கள் மீதான சபையினது பொதுவான பணிப்

புக்கமைய, புவிச்சரிதவியல் அளவீடுகளை நடாத்துதல், அத்துடன் இச் சட்டத்தின் நிருவாகம் என்பவற்றிற்குப் பொறுப்பானவராகவிருத்தலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பணிப்பாளர் அறுபது வயதினை அடைவதன் மேல் பதவியிலிருந்து இளைப்பாறுதல் வேண்டும்.

(4) பணிப்பாளரின் சேவையினது நியதிகளும் நிபந்தனைகளும் பணியகத்துடன் செய்துகொள்ளப்பட்ட சேவை ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

(5) பணிப்பாளர், நல்லதும் போதுமானதுமான காரணமின்றிப் பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது.

வெற்றிடம் இருந்த போதும் சபையானது செயலாற்றலாம்.

7. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினர்கள் எவரினதும் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாட்டின் காரணத்தினால் மட்டும் வலிதற்றதாகக் கருதப்படுதலாகாது.

சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.

8. (1) சபையானது, தவிசாளருக்கு, பணிப்பாளருக்கு அல்லது பணியகத்தின் ஊழியர் ஒருவருக்கு, இவ்வுட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவம் தவிர்ந்த, இச்சட்டத்தினால் பணியகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் அல்லது எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் தத்துவமானது கையளிக்கப்பெற்ற ஆள் ஒவ்வொருவரும், சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

சபை உறுப்பினர்கள் பணியகத்தினால் செய்யப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில், பொறுப்பு முயற்சியில் அல்லது ஒப்பந்தத்தில் தமக்குள்ள அக்கறையை வெளியிடுதல்.

9. பணியகத்தினால் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் கருத்திட்டத்தில், பொறுப்பு முயற்சியில் அல்லது ஒப்பந்தத்தில் நிதிசார்பாக அல்லது வேறு வகையில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறைகொண்டுள்ள சபையின் உறுப்பினர் ஒருவர் சபையின் கூட்டமொன்றில் இயலுமானளவு ஆக முந்திய சந்தர்ப்பத்தில் தமது அக்கறையின் தன்மை பற்றி வெளிவிடுதல் வேண்டும். அத்தகைய வெளிவிடுகையானது சபையின் கூட்டக் குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர், சபை வேறு வகையாகப் பணித்தால் ஒழிய அந்தக் கருத்திட்டம், பொறுப்பு முயற்சி அல்லது ஒப்பந்தம் தொடர்பில் சபையின் கலந்தாராய்வு அல்லது முடிவு எதிலும் பங்குபற்றுதலும் ஆகாது.

10. சபையின் எல்லா அல்லது எவர்களேனும் உறுப்பினர்களுக்கு நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும். — சபையின் உறுப்பினர்களின் ஊதியம்.

11. (1) பணியகத்தின் இலச்சினையானது தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். — பணியகத்தின் இலச்சினை.

(2) பணியகத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பணியகத்தின் இலச்சினையானது சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலல்லாது ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்களிருவரும் தாங்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

12. பணியகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் — — பணியகத்தின் பணிகள்.

(அ) இலங்கையின் முறைமையான புவிச்சரிதவியல் வரைபடத்தைத் தயாரிப்பதைப் பொறுப்பேற்றலும் அத்துடன் புவிச்சரிதவியல் வரைபடங்களைத் தயாரித்தலும்;

(ஆ) இலங்கையின் கனிப்பொருள் மூலவளங்களை இனங்காணுதலும், மதிப்பிடுதலும்;

(இ) அத்தகைய கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கும், பதனிடுவதற்கும் அத்துடன் ஏற்றுமதி செய்வதற்குமான வர்த்தக வாய்ப்பை மதிப்பிடுதல்;

(ஈ) உரிமங்களை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்களுக்காக அகழ்ந்தெடுத்தலையும் தோண்டுதலையும் அத்துடன் அத்தகைய கனிப்பொருட்களைப் பதனிடுவதையும் வியாபாரம் செய்வதையும் ஏற்றுமதி செய்வதையும் ஒழுங்குபடுத்துதல்;

(உ) வர்த்தக அடிப்படையில் கனிப்பொருட்களைப் பிரித்தெடுத்தலையும் உற்பத்தி செய்தலையும் ஊக்குவிப்பதற்குப் பின்பற்றப்படவேண்டிய வழிவகைகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை அளித்தல்.

13. (1) பணியகமானது, அதன் பணிகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான அல்லது அதற்கு உசிதமான அல்லது அதற்கு இடைநேர் விளைவான எதனையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். — பணியகத்தின் தத்துவங்கள்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பணியகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்கும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், ஈடு வைப்பதற்கும், அடகு வைப்பதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) அதன் தத்துவங்களைத் தகுந்த முறையில் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமான ஏதேனும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுவதற்கும் ;

(இ) அதன் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அவர்களின் ஊழியத்தை முடிவுறுத்துவதற்கும், அவர்களுக்கு ஊதியமளிப்பதற்கும் அத்துடன் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ;

(ஈ) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கும், தோண்டுவதற்கும், பதனிடுவதற்கும், ஏற்றியிறக்குவதற்கும், வர்த்தகம் செய்வதற்கும் அத்துடன் ஏற்றுமதி செய்வதற்கும் ஆன உரிமங்களை வழங்குதல் ;

(உ) வங்கியின் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மூடுவதற்கும், அத்துடன் நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் பணியகத்தின் நோக்கங்களுக்காக பணத்தைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும்;

(ஊ) பணியகத்தினால் வழங்கப்படும் எவையேனும் சேவைகளுக்கு அல்லது வசதிகளுக்குக் கட்டணங்களை அறவிடுவதற்கும் ;

(எ) பணியகத்தின் அலுவல்களை நிருவகிப்பது தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும் ; அத்துடன்

(ஏ) பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்கும் அத்துடன் பொதுவாக சபையின் கருத்தில் பணியகத்தின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் வசதியளிப்பதற்கு அவசியமாகவுள்ள வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்கு.

*பணியகத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

14. (1) சபையின் வேண்டுகோளுக்கிணங்க, பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் அத்துடன் பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க அலுவலர் எவரும், பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து —

(அ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட நேரத்தில் பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவியானது ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியத்திற்குரிய பதவியென வெளிப்படுத்தப்பட்ட ஒரு பதவியாகவிருந்தால் —

(i) அவர் பணியகத்தின் ஊழியத்தில் இருக்கும் போது, பகிரங்கக் கொள்கையின் ஏதுக்களின் மீது வழங்கப்பட்ட சம்பளமில்லா லீவில் அவர் பகிரங்க சேவையில் கடமையாற்ற வராதிருந்தவராகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, அக்குறிப்புக்களின் 10 (1) என்னும் பிரிவானது அவருக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும் ;

அத்துடன்

(ii) அவர் தொடர்பில் சபையானது, பணியகத்தின் ஊழியத்தில் அவர் இருக்கின்ற ஒவ்வொரு முழு மாதத்துக்கெனவும், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவியில் அவருக்குச் செலுத்தப்படற்பாலதான சம்பளத்தின் இருபத்தைந்து சதவீதத்திற்கு மேற்படாமல், நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய பணத்தொகையை பணியகத்தின் நிதியங்களிலிருந்து திரட்டு நிதியத்தில் வரவு வைப்பதற்கெனத் திறைசேரிக்குச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த நேரத்தில் அவர் பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ஒருவராக இருந்திருந்தால், பணியகத்திற்கு அவர் ஆற்றிய சேவையானது அக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க, அவர் பணியகத்தின் ஊழியத்தில் இருக்கும் போது, அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர் செலுத்துவதற்கு ஆளாகியிருக்கக்கூடியவாறான அத்தகைய உதவுதொகைகளை பகிரங்க சேவைச் சகாய நிதியத்திற்குத் தொடர்ந்தும் செலுத்திவருதல் வேண்டும். அத்துடன் அவர் தொடர்பில் பணியகமானது, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அரசாங்கமானது அவர் தொடர்பில் பகிரங்கச் சேவைச் சகாய நிதியத்திற்குச் செலுத்துவதற்கு ஆளாகியிருக்கும் அத்தகைய உதவுதொகைக்குச் சமமான ஒரு பணத்தொகையைப் பகிரங்க சேவைச் சகாய நிதியத்தின் தோதான கணக்கில் வரவுவைப்பதற்கென, பணியகத்தின் நிதியத்திலிருந்து, திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(3) எவரேனும் பகிரங்க அலுவலர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து—

(அ) அவர் பகிரங்க சேவையிலிருந்து விலகியவராகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படும் நேரத்தில், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவியானது ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியத்திற்குரிய பதவியாக வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றாக இருந்தால்—

(i) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட தேதியன்று அவர் பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறியிருந்தால் அக்குறிப்புக்களின்கீழ் அவருக்கு ஆக்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய அளிப்பொன்றைப் பெற அவர் உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன்

(ii) அக்குறிப்புக்களின்கீழ் ஆக்கப்படும் அத்தகைய ஏதேனும் அளிப்புத் தொகையானது, பணியகத்தின் பணியாட்டொகுதியில் அவரது ஊழியமானது வயது காரணமாக, அல்லது உடனலமின்மை காரணமாக அல்லது அத்தகைய பணியாட்டொகுதியில் அவர் வகித்த பதவியானது நீக்கப்பட்டதன் காரணமாக அல்லது பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஏதுவின் மேல் இளைப்பாறுவதன் மூலம் இடைநிறுத்தப்பட்டாலன்றி, அவருக்குச் செலுத்தப்படுதலாகாது; அத்துடன்

(iii) பணியகத்தின் ஊழியத்தில் இருக்கும்போது அவர் இறக்கின்ற விடயத்தில், பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் இறந்திருந்தால், அக்குறிப்புக்களின்கீழ் அவர் தொடர்பில் ஆக்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய அளிப்பொன்று, அவர் தொடர்பில் ஆக்கப்படலாம்; அத்துடன்

(இ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர் பகிரங்க சேவைச்சகாய நிதிக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்திற்கு ஓர் உதவுதொகை செலுத்துநராக இருந்தால், அவர் அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக, பதவியகற்றல் மூலமல்லாது, அரசாங்கத்தின் சம்மதத்துடன், அவரின் ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதன்மேல் அரசாங்க சேவையை விட்டு, நீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒரு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்படும் ஓர் ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஓர் ஆளை பணியகமானது ஊழியத்துக்கமர்த்துகின்றவிடத்து, அத்தகைய ஆளினால் பணியகத்திற்கு ஆற்றப்படும் ஏதாவது சேவைக்காலம் அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையெனக் கருதப்பட வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின்பேரில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரின் சம்மதத்துடனும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுநரின் சம்மதத்துடன் அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குப் பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன், சபையினால் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையினாலும் இணங்கிக்கொள்ளக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது சகாயநிதி உரிமைகள் தொடர்பான நியதிகள் நிபந்தனைகள் உள்ளடங்கலாக அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் எவரேனும் வேறு உறுப்பினர்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(7) சபையின் வேண்டுகோளின் பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன் அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடனும் அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குப் பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன் சபையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் இணங்கிக் கொள்ளக்கூடியவாறான, ஓய்வூதியம் அத்துடன் சகாய நிதி உரிமைகள் தொடர்பான அத்தகைய நிபந்தனைகள் உள்ளடங்கலாக அத்தகைய நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் எவரேனும் வேறு உறுப்பினர்போன்று, அதே ஒழுக்காற்று கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(9) இப்பிரிவில் "உயர்கல்வி நிறுவனம்" அத்துடன் "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பன 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினுல் குறித்தொதுக்கப்பட்ட முறையான கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பணியகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களெனக் கருதப்படுதல்.

15. பணியகத்தில் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச்சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

பணியகம் இலஞ்ச சட்டத்தின் கருத்தினுள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்படுதல்.

16. பணியகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

பணியகத்தின் நிதியம்.

17. (1) பணியகமானது அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) பணியகத்தின் நிதியத்தினுள் –

(அ) பணியகத்தின் பயன்பாட்டிற்கென பாராளுமன்றத்தினுல் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறன எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன்

(ஆ) அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பணியகத்தினுல் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பணியகத்தினுல் உறப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பணியகத்தின் நிதியாண்டும், கணக்குநரின் கணக்காய்வும்.

18. (1) பணியகத்தின் நிதியாண்டு, பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பணியகமானது பணியகத்தின் வருவாய், செலவு, சொத்துக்கள், பொறுப்புகள் அத்துடன் வேறு எல்லா கொடுக்கல் வாங்கல்களின் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பணியகத்தின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**சபைக்கான அமைச்சரின் பணிப்புகள்.**

19. (1) அமைச்சரானவர் பணியகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்துடன் பணியகத்தின் பணிகளைப் புரிவதில் சபைக்கு எழுத்தில் அத்தகைய பொதுப் பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன், சபையானது அத்தகைய ஒவ்வொரு பணிப்பையும் பயனுறுத்துதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் காலத்துக்குக் காலம், பணியகத்தின் தத்துவங்களைப் பிரயோகித்தல் அத்துடன் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில், விவரத்திரட்டுகளை, கணக்குகளை, அத்துடன் வேறு தகவலை அவர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய முறையில் அவருக்குக் கொடுத்துதவுமாறு எழுத்தில், சபையைப் பணிக்கலாம் என்பதுடன், சபையானது அத்தகைய ஒவ்வொரு பணிப்பையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

**காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் அசையா ஆதனத்தைக் கொள்ளுதல்.**

20. (1) பணியகத்தின் ஏதேனும் நோக்கத்திற்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளுதல் செய்யப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டு, அத்துடன் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலுக்கு அங்கீகாரமளிக்கின்றவிடத்து, ஆதனமானது பகிரங்க நோக்கம் ஒன்றிற்காக தேவைப்படுத்தப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கக் காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் கட்டாயமாகக் கொள்ளப்பட்டு பணியகத்திற்கு மாற்றப்படுதலும் வேண்டும்.

(2) பணியகத்திற்கென காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுவதில் உறப்பட்ட எவையேனும் செலவுகள் பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் அல்லது பணியகத்தின் பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

21. (1) (அ) இச்சட்டத்தின் கீழ் பணியகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக பணியகத்திற்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது பணியகத்தின் பணிப்பின்மீது, நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக பணியகத்தின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக,

வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பணியகத்தினால் அல்லது பணியகத்திற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்கில், பணியகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் அத்தகைய வழக்கில் அல்லது குற்ற வழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் பணியகத்தின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஆளினால் இச் சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக, ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய வழக்கில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் அத்தகைய செலவானது அறவிடப்படாதிருந்தால் பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*புவியியல்சார் அளவைத் திணைக்களத்தின் ஆதனத்தைப் பணியகத்திற்கு உரித்தாக்குதல்.*

22. (1) இச்சட்டத்தின் ("உரித்து மாற்றுத் தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் புவியியல்சார் அளவைத் திணைக்களம், உரித்துமாற்றுத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று எந்த ஆதனத்திற்கு, உரித்துக்களுக்கு அத்துடன் பொறுப்புக்களுக்கு உரித்துடையதோ அல்லது அமைவாகவுள்ளதோ அந்த எல்லா ஆதனமும் உரித்துக்களும், பொறுப்புக்களும், ((2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையினால் நீக்கப்பட்டவை தவிர்ந்த ஏனையவை) பணியகத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) உரித்து மாற்றத் தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரும் பணியகமும் அந்தேதிக்குப் பின்னர் புவியியல்சார் அளவைத் திணைக்களத்துடன் இருக்க வேண்டிய ஆதனங்களும் உரித்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பில் எழுத்தில் உடன்பட்டுக் கொள்ளலாம்.

*ஒப்பந்தங்கள் உரிமைகள் முதலியவற்றை உரித்துமாற்றுதலும் உரித்தாக்குதலும்.*

23. (1) உரித்துமாற்றத் தேதி தொடக்கம் 22 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையில் வேறுவகையில் உள்ளடக்கப்படாதவை தவிர்ந்த —

(அ) புவியியல்சார் அளவைத் திணைக்களத்துடன் அல்லது திணைக்களத்திற்காகச் செய்துகொள்ளப்பட்ட உரித்துமாற்றுத் தேதிக்கு உடனடியாக முற்போந்த நாளில் உள்ளதான எல்லா ஒப்பந்தங்களும் வேறு உடன்படிக்கைகளும் அத்தேதியிலிருந்து பணியகத்தினால் பணியகத்துடன் அல்லது பணியகத்திற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது வேறு உடன்படிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) உரித்துமாற்றுத் தேதிக்கு உடனடியாக முற்போந்த நாளில் உள்ளதான புவியியல்சார் அளவைத் திணைக்களத்தின் எல்லா அக்கறைகளும், உரித்துகளும், பாரிப்புரிமைகளும், கடப்பாடுகளும், கடன்களும், பொறுப்புக்களும் அத்தேதியிலிருந்து பணியகத்தின் அக்கறைகள், உரித்துக்கள், பாரிப்புரிமைகள், கடப்பாடுகள், கடன்கள், பொறுப்புக்கள் எனக் கருதப்படுதல் வேண்டும.

(இ) உரித்துமாற்றுத் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளில் புவியியல்சார் அளவைத் திணைக்களத்தினால் நிறுவப்பட்டு பேணப்பட்ட எல்லா அமைப்புகளும், பொறித்தொகுதியும் உபகரணமும் வேறு ஆதனமும் அத்தேதியிலிருந்து வலுவுடையதாகுமாறு பணியகத்திற்கு உரித்துமாற்றப்பட்டாதல் வேண்டுமென்பதுடன் பணியகத்துக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்;

(ஈ) பணியகமானது, கைமாற்றத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று புவிச்சரிதவியல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு வருமதியாகவும், போமதியாகவுமுள்ளனவான எவையேனும் பணங்களை அறவிடுவதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கத்தின் இணைந்த சேவையொன்றைச் சாராதவரும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று சேவையில் இருந்தவருமான புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒவ்வொருவருக்கும், எந்த நியதி நிபந்தனைகள் மீது அவர் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டவரோ அந்த நியதி நிபந்தனைகளைவிடக் குறைந்த அனுகூலமுடையனவாகவிராதனவான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது பணியகத்தினால் தொழில் முனையப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவரான அலுவலர் ஒருவர் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து—

(அ) அவர் பகிரங்க சேவையை விட்டு விலகியவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கான அவரது நியமன காலத்தில் பகிரங்க சேவையிலான அவரது நிலையான பதவி ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியம் பெறற்பாலதானதொரு பதவியாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின் —

(i) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியன்று, பதவி இல்லாதாக்கப்பட்டதன் ஏதுவின் மேல் அவர் பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாற்றுப்பட்டுள்ளாரெனின் அவருக்கு அக் குறிப்புக்களின்கீழ் அளிக்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகையதோர் அளிப்புக்குத் தகவுடையவராதல் வேண்டும்;

(ii) அந்தக் குறிப்புக்களின் கீழ் செய்யப்பட்டதான அத்தகைய அளிப்புத்தொகை எதுவும் வயது காரணமாக அல்லது பணியகத்தில் அவரால் வகிக்கப்படும் பதவி இல்லாதாக்கப்பட்டவையான அல்லது அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் ஏதுவின் மீது இளைப்பாறியதனால் பணியகத்திலான அவரது ஊழியம் முடிவுறுத்தப்பட்டாலன்றி, அவருக்குக் கொடுக்கப்படுதலாகாது;

(iii) பணியகத்தில் தொழிலில் இருக்கையில் அவர் இறக்கும் பட்சத்தில் பணியகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக் கப்படுவதற்கு நேர்முந்தி அவர் இறந்திருந்தால் அக் குறிப்புக்களின் கீழ் அவர் தொடர்பில் அளிக்கப்பட்டிருக் கக்கூடியதான அத்தகைய அளிப்பொன்று அவர் தொடர் பில் அளிக்கப்படலாம்; அத்துடன்

(இ) பணியகத்தின் பணியாட்டொகுதிக்கான அவரது நியமன காலத்தில் அவர் பகிரங்கச் சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சகாய நிதி யத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்திருப் பின் அவர் அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அர சாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டதன் மேல் பதவியகற்றுகையினுல் அல்லாது வேறுவகையாக அர சாங்க சேவையை விட்டு விலகியவராகக் கருதப்படுதல் வேண் டும்.

(4) குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்றுவதாக உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன் றைச் செய்துள்ளவரான ஆளெவரையும் பணியகம் தொழிலுக்கமர்த்தி யிருக்குமிடத்து அலுவலரினுல் ஆற்றப்படும் பணியகத்திற்கான சேவைக் காலப்பகுதி எதுவும் ,அத்தகைய ஒப்பந்தத்தின் இடர்பாடுகளை நிறை வேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கொணரப் படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாருன பகிரங்க அலுவலரெவரும் அந்த உட்பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்படும் முனைவை ஏற்காதவிடத்து, அவர் –

(அ) நியமிக்கப்பட்ட தேதியன்று பகிரங்க சேவையைவிட்டு விலகிய வராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (i) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று புவிச் சரிதவியல் அளவீட்டுத் திணைக்களத்திலான அவரது நிலை யான பதவியானது ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்க ளின் கீழ் ஓய்வூதியம் பெறற்பாலதான பதவியொன்றுக வெளிப்படுத்தப்பட்டிருந்தால், நியமிக்கப்பட்ட தேதி யன்று பதவி இல்லாதாக்கப்பட்டதென்ற ஏதுவின்மீது பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாற்றப்பட்டிருந்தால் அக்குறிப்புக்களின் கீழ் அவருக்கு அளித்திருக்கப்படக் கூடிய அத்தகைய அளிப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண் டும்; அல்லது

(ii) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று பகி ரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்தும் ஒருவராக இருந்திருந்தால் அக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் அர சாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட் டதன் மேல் பதவியகற்றுகையினுல் அல்லாது வேறுவகை

யாக, அரசாங்க சேவையை விட்டுவிலகியவராகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளைச்சட்டத்தின் கீழான அளிப்பொன்றுக்குத் தகவுடையவராதலும் வேண் டும்.

24. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுகை எது எவ்வாறி ருப்பினும் 22ஆம் பிரிவின் பயனைக்கொண்டு அசைவற்ற ஆதனத்தை அல்லது அதனகத்துள்ள ஏதேனும் அக்கறையை உரித்தாக்குதலானது எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய எல்லா ஆதனத்தின் அல்லது அதனகத்துள்ள ஏதேனும் அக்கறையின் முழு உரித்தையும், பதிவுசெய் வதற்கான ஏதேனும் தேவைப்பாட்டின் மேலதிக எண்பிப்பன்றி, பணி யகத்திற்குக் கொடுப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**கைமாற்ற மானது அசைவற்ற ஆதனத்தின் முழு உரித்தையும் பணியகத் திற்குக் கொடுத்தல்.**

25. இருபத்திரண்டாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய் யப்பட்டுள்ள உடன்படிக்கையினால் தவிர்க்கப்பட்டனவான புவிச்சரித வியல் அளவீட்டுத் திணைக்களத்தின் ஆதன உரிமைகள் அத்துடன் பொறுப்புக்கள் என்பவற்றைப் பணியகத்திற்குக் கைமாற்றுதலானது, கைமாற்றல் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய மூன்றும் திறத் தவருக்கும் புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களத்திற்கும் இடை களில் உள்ளதான ஏதேனும் ஒப்பந்தத்திற்கான அல்லது உடன்படிக் கைக்கான மூன்றும் திறத்தவர் ஒருவரினால் உரிமைகளைப் பங்கமான முறையில் பாதிப்பதாக எவ்வகையிலும் கருதப்படுதலாகாது என்பது டன் அத்தகைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை ஒவ்வொன்றும் புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களத்திற்கான அத்தகைய ஒவ் வோர் ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலுமான குறிப்பீடொவ்வொன் றும், பணியகத்திற்கான குறிப்பீடொன்று என்றாற்போன்று கைமாற்றத் தேதிக்குப் பின்பு செல்லுபடியாதலும், பணியகத்திற்குச் சாதகமாக அல்லது எதிராக வலுவுக்கிடற்பாலதாதலும் வேண்டும்.

**மூன்றும் திறத்தவர் உரிமைகள் பங்கப்படுத்தப் படுதலாகாது.**

## பாகம் II

### கனிப்பொருட்களின் சொத்தாண்மையும் உரிமங்கள் வழங்கலும்

26. (1) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அமையவும் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தினால் அளிக்கப் பட்ட உரிமைகளுக்கு அமையவும் கனிப்பொருட்களின் சொத்தாண்மை யானது எந்த மண்ணின்மீது மண்ணில் அல்லது மண்ணின்கீழ் கனிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனவோ அல்லது அமைந்துள்ள னவோ அம்மண்ணுக்கு எவரேனுமாள் கொண்டிருக்கக்கூடியதான ஏதே னும் சொத்தாண்மை உரிமை அல்லது வேறுவகையிலான உரிமை எது எப்படியிருப்பினும் இத்தால் குடியரசுக்கு உரித்தாக்கப்படுகிறது.

**கனிப்பொருட் களின் சொத் தாண்மையும் கண்டுபிடிப்பும்.**

(2) எவையேனும் கனிப்பொருட்களை கண்டுபிடிப்பவரான எவரேனு மாள், அதுபற்றி உடனடியாகப் பணியாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

27. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாப னச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள ஏதேனும் கனிப்பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

**இச்சட்டம் நீரகக் கரியச் சேர்மப் பொருட்க ளைப் பாதித்த லாகாது.**

தோண்டுதல் முதலியன உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் இருத்தல்.

28. (1) ஆள் எவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழும் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர அல்லது உரிமமொன்றோடு இணங்கவல்லாது வேறுவகையில் எவையேனும் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தலோ, சுரங்கம் தோண்டுதலோ, இடம்பெயர்த்தலோ, பதனிடுதலோ, வியாபாரம் செய்தலோ அல்லது ஏற்றுமதி செய்தலோ ஆகாது:

ஆயின், நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் 1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ், எவையேனும் கனிப்பொருட்களை சுரங்கம் தோண்டுவதற்கு, அகழ்ந்தெடுப்பதற்கு, பதனிடுவதற்கு, வியாபாரம் செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்குத் தொடங்கிவிட்டவரான எவரேனுமாள், அத்தேதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு அவ்வாறே தொடர்ந்து செய்தல் வேண்டும். ஆனால் அத்தகைய காலப்பகுதிக்குள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான உரிமமொன்றுக்கு அவர் விண்ணப்பித்தல் வேண்டும்; அத்துடன் அத்தேதிக்குப் பின்னர் தோண்டப்படும் கனிப்பொருள் எதுவும் அத்தகைய இடம்பெயர்த்தல் அல்லது கையாளுகை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமிடையே இருந்தால் ஒழிய, சுரங்கத்திலிருந்து இடம்பெயர்த்தப்படுதலோ அல்லது கையாளப்படுதலோ ஆகாது.

(2) கனிப்பொருட்களைப் பொதுமக்களுக்கு விற்பதற்கென, அல்லது பூரணவு செய்து முடிக்கப்பட்ட அல்லது முற்றாக செய்து முடிக்கப்பட்ட பொருளில் சேர்ப்பதற்கென, பதனிடப்பட்ட பின்னரான அத்தகைய கனிப்பொருட்களை கொள்வனவு செய்பவரான ஓர் ஆள், அத்தகைய கனிப்பொருட்களில் வியாபாரம் செய்வதற்கு உரிமமொன்றை வைத்திருக்குமாறு தேவைப்படுத்தப்படலாகாது.

(3) ஏதேனும் கனிப்பொருளைத் தோண்டுவதற்கு இச்சட்டத்தின் கீழ் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று, அத்தகைய உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தோண்டப்பட்ட ஏதேனும் கனிப்பொருளின் சொத்தாண்மையை அவ்வாறு உரிமம் பெற்றவருக்குக் கைமாற்றலாம்.

(4) ஏதேனும் காணியின் சொந்தக்காரர் அல்லது அக்காணியின் மேற்புறத்தின் குடியிருப்பாளர் எவரேனும் அல்லது ஏதேனும் காணியின் மீது கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு உரிமமொன்றை வைத்திருப்பவர் எவரேனும், கட்டுமான நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கனிப்பொருட்களை அத்தகைய காணியின் மீது தோண்டுவதற்கு அல்லது அத்தகைய கனிப்பொருட்கள் எதனையும் அத்தகைய காணியிலிருந்து இடம்பெயர்வதற்கு உரிமமொன்றைப் பெறுதல் வேண்டுமென இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

29. (அ) (i) பதினெட்டு வயதுக்குக் குறைவானவரான;

(ii) பகிரங்க அலுவலர் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் ஊழியர் ஒருவராக உள்ளவரான;

(iii) சித்தசுவாதீனமற்றவரென இலங்கையில் வலுவில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப் பட்டவரான;

(iv) கடனிறுக்கையற்றவர் அல்லது வங்கி முறிந்தவர் ஒருவரென இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டு, விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிந்தவர் ஒருவராக உள்ளவரான

தனியாள் ஒருவருக்கு;

உரிமங்கள் வழங்குதல் மீதான மட்டுப்பாடு.

(ஆ) (i) இலங்கையில் தொழில் புரிவதற்குப் பதிவுசெய்யப் படாததும்;

(ii) வங்கி முறிந்ததென அல்லது ஒழித்துக்கட்டப்படுவ தென வெளிப்படுத்தப்பட்டதும்

ஆன கம்பனியொன்றுக்கு; அத்துடன்

(இ) (i) இலங்கையில் தொழில் புரிவதற்குப் பதிவுசெய்யப் படாததும்;

(ii) வங்கி முறிந்ததென அல்லது ஒழித்துக்கட்டப்பட்ட தென வெளிப்படுத்தப்பட்டதும்;

ஆன குழுவொன்றுக்கு;

(ஈ) விண்ணப்பிக்கப்பட்டுள்ள உரிமம் தொடர்பிலான செயற்பாடு களை நடத்துவதற்கு பணியகத்தின் அபிப்பிராயப்படி, அவசிய மான நிதித் தகுதிகளையும் தொழில்நுட்பத் தகைமைகளையும் கொண்டிராதவரான எவரேனும் விண்ணப்பக்காரருக்கு;

(உ) உரிமத்தின் வழங்கலுக்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத் தைச் செலுத்துவதற்குத் தவறுகின்றவரான எவரேனும் விண் ணப்பக்காரருக்கு;

எவையேனும் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு, அல்லது சுரங் கம் தோண்டுவதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, வியா பாரம் செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு உரிமம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

**உரிமங்கள் வழங்குவதற்கான தத்துவங்களின் மீதான மட்டுப்பாடு.**

30. (1) பின்வருவனவற்றின் மீது கனிப்பொருட்கள் எவற்றையும் அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு ஆளெவருக்கும் பணியகம் உரிமம் ஒன்றை வழங்குதல் ஆகாது :—

(அ) அமைச்சரினதும், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கிகாரமில்லாமல், (231 ஆம் அத்தியாயமான) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஏதேனும் இடுகாடு அல்லது சுடுகாடு;

(ஆ) அமைச்சரினதும், இயைபான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், புகையிரதத் தண்டவாளமொன்றின், விமான நிலையமொன்றின், வீதியொன்றின், பொதுவழியொன்றின், மின்கம்பமொன்றின் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு பொது வேலையொன்றின் அல்லது வேறு பொதுக் கட்டிடமொன்றின் அத்தகைய தூரத்துக்குள் அமைந்துள்ளதான ஏதேனும் காணி ;

(இ) அமைச்சரினதும், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட விதித்துரைக்கப்படக்கூடியவாறான குளமொன்றின் ஓடையொன்றில், அல்லது வாவியொன்றின் அல்லது அணைக்கட்டு ஒன்றின் அத்தகைய தூரத்துக்குள் அமைந்துள்ளதான ஏதேனும் காணி ;

(ஈ) அமைச்சரினதும், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஏதேனும் வனவிலங்கினப் பாதுகாப்பிடம் இயற்கை ஒதுக்கிடம், காடு அல்லது பூங்கா;

(உ) அமைச்சரினதும் காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட நீர்ப்பிடிப்பு இடப்பரப்பொன்றின் தூரத்துக்குள் அமைந்துள்ளதான ஏதேனும் காணி ;

(ஊ) அமைச்சரினதும், கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட முற்கரை அல்லது கடற்படுகை;

(எ) அமைச்சரினதும், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல், கடற்படை, இராணுவம் அல்லது வான்படை அதிகாரியிடம் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் காணி ;

(ஏ) அமைச்சரினதும், மாகாண சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரமில்லாமல் ஏதேனும் மாகாண சபையிடம் அல்லது உள்ளூரதிகாரசபை ஒன்றிடம் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் காணி.

(2) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் நிபந்தனை மேலதிகமாக விடயத்துக்கேற்ப (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அமைச்சர் அல்லது அமைச்சர்கள், (1) ஆம் உட்பிரிவின்கீழான உரிமமொன்றிற்கு அங்கீகாரம் வழங்குவதில், அத்தகைய அமைச்சரினால் அல்லது அமைச்சர்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக நிபந்தனைகள் எவற்றுக்குமமைய அங்கீகாரம் வழங்கப்படுமிடத்து அத்தகைய நிபந்தனைகள் உரிமத்தில் குறித்துரைக்கப்படுதலைப் பணியகம் செய்வித்தல் வேண்டும்.

எவ்விடப் பரப்புகள் தொடர்பில் உரிமங்கள் எவையும் வழங்கப்படுதல் ஆகாது என்பது.

31. பின்வருவனவற்றின் மீது கனிப்பொருள்கள் எதனையும் அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு ஆளெவருக்கும் பணியகம் உரிமம் ஒன்று வழங்குதலாகாது:—

(அ) (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டவாறு, அரச காணியின்மீது அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் பண்டைக்காலச் சின்னத்தின் அல்லது பாதுகாக்கப்பட்ட ஏதேனும் சின்னத்தின் அத்தகைய தூரத்துக்குள் அமைந்துள்ளதான ஏதேனும் காணி; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் தொல்பொருளியல் ஆராச்சிக்கான ஒதுக்கிடம் ஒன்றாக இருத்தல் வேண்டுமெனத் தொல்பொருளியல் ஆராய்ச்சி ஆணையாளரினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் காணி.

மூடப்பட்டதும் ஒதுக்கப்பட்டதுமான இடப்பரப்புகள்.

32. (1) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் அத்தகைய அறிவிப்பில் விபரிக்கப்பட்டுள்ள இடப்பரப்பு ஆனது அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்காக, அல்லது சுரங்கம் தோண்டுவதற்காக ஒதுக்கி வைக்கப்படவேண்டுமென வெளிப்படுத்தலாம்:

ஆயின், இப்பிரிவின்கீழான ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில், அவ்விடப்பரப்புத் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று அப்போதைய நேரத்துக்கு வலுவிலிருக்குமாயின், அறிவிப்பு எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) பணியகமானது அத்தகைய அறிவிப்பில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் காணியில், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருள் தவிர்ந்த ஏதேனும் கனிப்பொருளை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு ஆள் எவருக்கும் உரிமமொன்றை வழங்குதலாகாது.

ஒதுக்கப்பட்ட கனிப்பொருட்கள் முதலியன.

33. (1) அமைச்சர்களின் அமைச்சரவையினதும் வேறெவரேனும் இயைபான அமைச்சரினதும் அங்கீகாரத்துடனன்றி உரிமம் எதுவும் யுரேனியம், தோரியம், பெரிலியம், லிதியம், பவளம் மற்றும் வேறேதேனும் விதித்துரைக்கப்பட்ட கனிப்பொருள் என்பவற்றை அகழ்ந்தெடுப்பதற்காக, சுரங்கம் தோண்டுவதற்காக, இடம்பெயர்ப்பதற்காக, பதனிடுவதற்காக, வியாபாரம் செய்வதற்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்காக இச் சட்டத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது.

(2) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வகுதியினவான கனிப்பொருட்களை ஒதுக்கிவைக்கப்பட்ட கனிப்பொருள் ஒன்றென வெளிப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கான அல்லது சுரங்கம் தோண்டுவதற்கான, சேகரிப்பதற்கான, அகற்றுவதற்கான, இடம்பெயர்ப்பதற்கான, பதனிடுவதற்கான அல்லது வியாபாரம் செய்வதற்கான அல்லது ஏற்றுமதி செய்வதற்கான உரிமமொன்று எந்நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட வேண்டுமோ அந்நிபந்தனைகளை விதித்துரைக்கவுஞ் செய்யலாம்:

ஆயின், விதித்துரைக்கப்பட்டவாறான அந்நிபந்தனைகள் அத்தகைய ஏதேனும் கனிப்பொருளை அல்லது இயற்கை மூலவளத்தை அகழ்ந்தெடுக்கின்றமைக்கு அல்லது சுரங்கம் தோண்டுகின்றமைக்கு, சேகரிக்கின்றமைக்கு, அகற்றுகின்றமைக்கு, இடம்பெயர்க்கின்றமைக்கு, பதனிடுகின்றமைக்கு, வியாபாரம் செய்கின்றமைக்கு அல்லது ஏற்றுமதி செய்கின்றமைக்கு அதிகாரமளிக்கின்ற அத்தகைய கட்டளையின் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட உரிமம் எதற்கும் ஏற்புடையனவாதல் ஆகாது.

உரிமத்துக்கான விண்ணப்பம்.

34. இச்சட்டத்தின்கீழான உரிமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பணியகத்துக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விபரங்களைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய ஆவணங்களுடனும் விதத்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

உரிமம் வழங்கல்.

35. (1) இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், பணியகம் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பகாரருக்கு உரிமொன்றை வழங்கலாம் அல்லது அதனுல் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அத்தகைய விண்ணப்பக்காரருக்கு உரிமமொன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

(2) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும்—

(அ) நான்காம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, வியாபாரம் செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு அல்லது எவ்விடப்பரப்புத் தொடர்பில் உரிமம்பெற்றவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அவ்விடப்பரப்பின் எல்லைகளைக் குறித்துவைத்தல் வேண்டும்;

(இ) எந்தக் கனிப்பொருட்கள் தொடர்பில் அகழ்ந்தெடுக்கின்றமைக்கு, சுரங்கம் தோண்டுகின்றமைக்கு, இடம்பெயர்க்கின்றமைக்கு, பதனிடுகின்றமைக்கு, வியாபாரம் செய்கின்றமைக்கு அல்லது ஏற்றுமதி செய்கின்றமைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அக்கனிப்பொருட்களைக் குறித்துவைத்தல் வேண்டும்;

(ஈ) கைமாற்றப்படுதலோ அல்லது பிணைப்பொறுப்பாக அளிக்கப் படுதலோ ஆகாது; அத்துடன்

(உ) அத்தகைய உரிமத்தின் கால எல்லையைக் குறித்து வைத்தல் வேண் டும்;

ஆயின் எவ்வாறாயினும் கைத்தொழில்கள் சுரங்கம் தோண்டுதல் உரிம மொன்று, அத்தகைய உரிமம் எந்த முதலீட்டு உடன்படிக்கையைப் பின் பற்றி வழங்கப்பட்டதோ அந்த உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளவாறு அல்லது வேறுவகையில் பணியகத்தின் அங்கீகாரத்தின் மேலும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக் கமையவும் கைமாற்றப்படலாம் அல்லது பிணைப்பொறுப்பாக அளிக்கப் படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உரிமம், அது ஏலவே இல் லாதொழிக்கப்பட்டாலொழிய, அதில் குறித்துரைக்கப்படவேண்டிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண் டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும் 30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள நிபந்தனை களுக்கு மேலதிகமாக அதனுடன், மற்றவற்றுக்கிடையில் பின்வரும் நிபந் தனைகளும் இணைக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்:—

(அ) உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட கனிப்பொருட்களை அகழ்ந் தெடுக்கின்றதில், தோண்டுகின்றதில், பதனிடுதலில், வியாபாரம் செய்வதில் அத்துடன் ஏற்றுமதி செய்வதில் மோசடியாக, கவலை யற்று, மொத்தத்தில் கவனயீனமாக அல்லது வேண்டுமென்றே தவறானமுறையில் நடந்துகொள்ளாதிருத்தல்;

(ஆ) உரிமம் பெற்றவர், உரிமத்தின்கீழான அல்லது உரிமைகளைப் பிர யோகித்தலில் அவரால் கண்டுபிடிக்கப்படும் கனிப்பொருட்களைப் பற்றிப் பணியகத்துக்கு அறிவித்தல் வேண்டும்;

(இ) உரிமம் பெற்றவர், உரிமத்தின்கீழான அல்லது உரிமைகளைப் பிர யோகித்தலில் சூழலின் சுகாதார காப்பு நியமங்கள், இயற்கை மூலவளங்களின் பாதுகாப்பு என்பன தொடர்பான எழுத்திலான சட்டங்கள் எல்லாவற்றோடும் இணங்கியொழுகுதல் வேண்டும்;

(ஈ) உரிமம் பெற்றவர், உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பெற்ற அகழ்ந் தெடுத்தலை அல்லது தோண்டுதலை நிறைவேற்றியதன்மேல், குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நிலைமைக்கு, அத் தகைய உரிமமானது தொடர்புடையதான காணியைப் புனர மைத்தல் வேண்டும்;

(உ) உரிமம் பெற்றவர், பணியகத்தின் முன் அனுமதியுடன் அல்லாமல், ஆறு மாதங்களை விஞ்சுகின்ற ஒரு காலப்பகுதிக்கு உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை இடைநிறுத்தி வைத்தலோ, குறைத்தலோ அல்லது நிறுத்தி வைத்தலோ ஆகாது;

(ஊ) உரிமம்பெற்றவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளோடும் அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளோடும் இணங்கியொழுகுதல் வேண்டும்;

(எ) உரிமம்பெற்றவர், அவரால் பேணப்படுதல் வேண்டுமெனப் பணியகத்தினால் தேவைப்படுத்தப்படுபவையான அத்தகைய புத்தகங்களையும், வேறு ஆவணங்களையும், பொருட்களையும் பேணப்படுவதுடன், தேவைப்படுத்தப்பட்ட விபரங்களை அவற்றில் பதிதலும் வேண்டும்;

(ஏ) உரிமம்பெற்றவர், அத்தகைய உரிமம் தொடர்பிலான கட்டணத்தையும் அத்துடன் அத்தகைய உரிமத்தின் பயனைக்கொண்டு அல்லது அதன்கீழ் செலுத்துவதற்கு அவர் தேவைப்படுத்தப்படும் வேறு எவையேனும் கொடுப்பனவுகளையும் இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் பணியகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்;

(ஐ) உரிமம்பெற்றவர், அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடு எந்த வளவில் கொண்டுநடாத்தப்படுகிறதோ அந்த வளவினை அணுகுவதற்குப் பணியகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு இடமளிப்பதுடன், உரிமத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக உரிமம்பெற்றவரினால் பேணப்படும் புத்தகங்கள், பதிவேடுகள் வேறு ஆவணங்கள் எல்லாவற்றையும் அத்தகைய அலுவலருக்குக் கிடைக்கச் செய்வதுடன், அத்தகைய அலுவலரினால் வழங்கப்படும் சட்டமுறையான ஏதேனும் பணிப்புடன் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்;

(ஒ) உரிமம்பெற்றவர், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்மூலம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் மூலம், சமர்ப்பிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அவர் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய அறிக்கைகளைப் பணியகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கைகளைப் பணியகத்துக்கு வழங்குதலும் வேண்டும்.

**உரிமமொன்றின் புதுப்பிப்பு.**

36. இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, அவ்வுரிமம் முடிவடைவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் பணியகத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின்மேல் —

(அ) உரிமம்பெற்றவர், உரிமத்துடன் சேர்க்கப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்துள்ளாரெனப் பணியகம் திருப்தியடையுமாயின்; அத்துடன்

(ஆ) உரிமம்பெற்றவர், உரிமத்தின் புதுப்பிப்புக்கான விதித்துரைக்கப் பட்ட கட்டணத்தை செலுத்துவாரெனின்

உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

37. (1) பணியகம் ஆனது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை, உரிமம்பெற்றவர் — உரிமமொன்றினை இல்லாதொழித்தல்.

(அ) அத்தகைய உரிமத்துக்குச் சேர்க்கப்பட்டதான நியதி அல்லது நிபந்தனை ஏதேனையும் மீறியுள்ளாரென;

(ஆ) பணியகத்தினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சட்டமுறையான பணிப்பினை நிறைவேற்றவில்லையென;

(இ) விரயமான சுரங்கம் தோண்டுதலுக்கு எதிராகப் பணியகத்தினால் எழுத்தில் வழங்கப்பட்ட முன்னெச்சரிக்கையையும் மீறி அத்தகைய சுரங்கம் தோண்டுதலைக் கொண்டுநடத்துகிறாரென;

(ஈ) பணியகத்தின் அனுமதியில்லாமல் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு, அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளாரென, குறைத்துள்ளாரென அல்லது கொண்டுநடாத்தாதொழிந்துள்ளாரென;

(உ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கு அமைய அல்லது உரிமத்தை ஒப்படைத்துள்ளாரென; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டுள்ளாரென

பணியகம் திருப்தியடையுமாயின், இல்லாதொழிக்கலாம்.

(2) பணியகத்தின் முடிவுக்கு எதிராக 39 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடு செய்கின்றமைக்கான நேரம் முடிவடையும் வரையில், அல்லது உரிய நேரத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருக்குமாயின், அம்மேன்முறையீடு அனுமதிக்கப்படாதுவிட்டாலே ஒழியவும் அத்துடன் அனுமதிக்கப்படாதுவிடும்வரையிலும், உரிமமொன்றினது (1) ஆம் உட்பிரிவின்கீழான இல்லாதொழிப்பு பயன்பெறாதிருத்தல் வேண்டும்.

பணியகம் அதன் முடிவு பற்றி அதற்கான காரணங்களையும் சேர்த்து விண்ணப்பக்காரருக்கு அல்லது உரிமம் பெற்றவருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

38. (1) உரிமமொன்றின் வழங்கலை அல்லது புதுப்பித்தலை மறுப்பதற்கு அல்லது உரிமமொன்றினை இல்லாதொழிப்பதற்கு பணியகம் தீர்மானிக்குமிடத்து, அதன் முடிவை அதற்கான காரணங்களுடன் சேர்த்துப் பதிவஞ்சல்மூலம், விடயத்துக்கேற்றவாறு விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம்பெற்றவருக்குப் பணியகம் தெரியப்படுத்துதல் வேண்டும்.

(2) விண்ணப்பக்காரர் அல்லது உரிமக்காரர் எவரேனுக்கும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தெரியப்படுத்தப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் முடிவு, அத்தகைய விண்ணப்பகாரரின் அல்லது உரிமம்பெற்றவரின் வழமையான தொழிலிடத்துக்கு அல்லது வதிவிடத்துக்குப் பதிவஞ்சல்மூலம் அத்தகைய தெரியப்படுத்தல் அனுப்பி வைக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்று நாட்களைக்கொண்ட காலப்பகுதியொன்று முடிவடைந்ததன்மேல், அவ்வாறு தெரியப்படுத்தப் பட்டுவிட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

39. (1) (அ) பிரிவு 35 அல்லது பிரிவு 36 என்பதன்கீழ், உரிமமொன்றின் வழங்கலை அல்லது புதுப்பித்தலை மறிக்கின்றதான;

(ஆ) பிரிவு 37 என்பதன்கீழ் உரிமத்தை இல்லாதொழிக்கின்றதான

பணியகத்தின் முடிவினால் இன்னலுறுகின்றவரான, விடயத்துக்கேற்றவாறு விண்ணப்பக்காரர் அல்லது உரிமம்பெற்றவர், அம்முடிவு அவருக்கு தெரியப்படுத்தப்பட்ட தேதியின் பதினான்கு நாட்களுக்குள் அம்முடிவுக்கு எதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) செயலாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது —

(அ) அம்மேன்முறையீட்டினை அனுமதிக்கலாமென்பதுடன், மேன்முறையீட்டின் விடயமான உரிமத்தை வழங்கும்படி அல்லது புதுப்பிக்கும்படி பணியகத்தைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டினை அனுமதிக்காதுவிடலாம்.

(3) செயலாளரினால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு பணியகம் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று, இச்சட்டத்தின் எவையேனும் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் மறுக்கப்படுமிடத்து, பணியகம், அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்படுகின்ற கட்டணத்தை, விடயத்துக்கேற்றவாறு அவ்விண்ணப்பகாரருக்கு அல்லது உரிமம்பெற்றவருக்கு திருப்பிச்செலுத்துதல் வேண்டும்.

(5) செயலாளர், மேன்முறையீட்டாளருக்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு பற்றிய அவரது முடிபை அதற்கான காரணங்களுடன் பதிவுத்தபால்மூலம் அறிவித்தல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டுள்ள எவையேனும் முடிவுகள், அத்தகைய மேன்முறையீட் டாளரின் வழமையான தொழில் இடத்திற்கு அல்லது வதிவிடத்திற்கு பதிவஞ்சல்மூலம் அத்தகைய தெரியப்படுத்தல் அனுப்பிவைக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்று நாட்கள்கொண்ட காலப்பகுதி முடிவடைந்ததன்பின்னர், அவ்வாறு தெரியப்படுத்தப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

உயர்நீதி மன்றத்திற்கு மேன்முறை யீடு.

40. (1) பிரிவு 39 ன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாளரின் முடிவி னால் இன்னலுறுகின்ற ஆள் எவரும், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத் திற்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஒவ்வொரு மேன்முறை யீடும் உயர்நீதிமன்றத்தின் இயைபான , விதிகளினால் விதித்துரைக்கப் பட்ட முறையில் இருத்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப் பட்ட மேன்முறையீடு ஒன்றின் மேல், அத்தகைய மேன்முறையீடானது எம்முடிவுக்கெதிராகச் செய்யப்பட்டதோ அம்முடிவை உறுதிப்படுத்த லாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

உரிமத்தின் முடிவுறுத் தல்.

41. (1) உரிமமொன்றை வைத்திருப்பவர், பொறுப்பு வரையறுக்கப் பட்ட கம்பெனியொன்றாகவிருந்து வங்கி முறிவடையுமிடத்து அல்லது கடனிறுக்க வகையற்ற ஒன்றென நீதித் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அக் கம்பெனி வங்கி முறிவடைந்ததென அல்லது கடனிறுக்க வகையற்ற தென நீதித் தீர்ப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து உரிமம் முடிவுறுத் தப்பட்டுவிட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) உரிமமொன்றை வைத்திருப்பவர், மரணமடையுமிடத்து அல்லது வங்கி முறிவடையுமிடத்து அல்லது கடனிறுக்கவகையற்றவ ரென நீதித் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, உரிமம்பெற்றவர் எத்தேதியன்று மரணமடைகிறாரோ அல்லது வங்கி முறிவடைந்தவரென அல்லது கட னிறுக்க வகையற்றவரென நீதித் தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அத்தேதி யிலிருந்து பெறுவதாக உரிமம் முடிவுறுத்தப்பட்டு விட்டதெனக் கரு தப்படுதல் வேண்டும்.

(3) உரிமமொன்றை வைத்திருப்பவர் பங்குடைமையொன்றாக விருந்து குலைக்கப்படுமிடத்து, அப்பங்குடைமை குலைக்கப்பட்ட தேதியி லிருந்து உரிமம் முடிவுறுத்தப்பட்டுவிட்டதெனக் கருதப்படுதல் வேண் டும்.

கனிப்பொருள் நீரின் ஆய்வு அல்லது அபிவிருத்தி முதலிய வற்றுக்கென உரிமம் எது வும் தேவைப் படாது.

42. வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் காணி யின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது அத்தகைய காணியில் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவரான உரி மம் பெற்றவர் ஒருவர், அவரது சொந்தப் பாவனைக்கென உரிமம் இல்லா மலே அத்தகைய காணியில் அல்லது காணியிலிருந்து கனிப்பொருள் நீருக்காக ஆய்வுசெய்யலாம், சுரங்கம் தோண்டலாம், அபிவிருத்தி செய் யலாம், உற்பத்தி செய்யலாம் அல்லது நுகர்வு செய்யலாம்.

இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக பணியகம் இருத்தல் வேண்டும்.

43. இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின தும் நிருவாகத்துக்குப் பணியகம் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

பணியகத்தின் தத்துவங்கள்.

44. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பணியகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவையான எல்லா உரிமங்கள் தொடர்பிலுமான இடாப்புகளையும், வரைபடங்களையும், ஏனைய பதிவேடுகளையும், விடயங்களையும், அத்துடன் இச்சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவையான மூடப்பட்டவையும் ஒதுக்கி வைக்கப்பட்டவையுமான இடப்பரப்புகளையும் ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளனவான கனிப்பொருட்களையும் பேணி வருவதற்கான தத்துவம் ; அத்தகைய இடாப்புகளும் வரைபடங்களும் பதிவேடுகளும் விடயங்களும் அவற்றின் இரகசியத்தன்மைக்கான கட்டுப்பாட்டுடன் பொதுமக்களின் பார்வையிடலுக்கென திறந்து வைக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் பணியகத்துக்கு வருமதியாகவுள்ள கட்டணங்கள், வாடகைகள், வேற்றுரிமைகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் கோருவதற்கும், பெறுவதற்கும், அறவிடுவதற்கும் ஆன தத்துவம் ;

(இ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவையான அகழ்ந்தெடுத்தல் ; சுரங்கம் தோண்டுதல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்பார்வையிடலும் அத்துடன் அத்தகைய நடவடிக்கைகளை நடத்துதல் பற்றி உரிமம்பெற்றவருக்குப் பணிப்புக்களை வழங்குதலும் ;

(ஈ) உரிமமொன்று அது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதான ஏதேனும் காணியில், சுரங்கத்தில் அல்லது வேறு வளவில் நுழைந்து பார்வையிடவும் அத்துடன் அத்தகைய உரிமத்தின் நியதி நிபந்தனைகள் அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இணங்கியொழுகப்பட்டுள்ளதா அல்லவா என்பதனையும் நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பு[illegible]ய்வுகளை அல்லது அளவீடுகளை அதன்மீது நிறைவேற்றுவத[illegible]கான தத்துவம்;

(உ) அவரது உரிமத்தின் ஏதேனும் நியதியுடன் அல்லது நிபந்தனை யுடன், அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் அ[illegible]லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் உ[illegible]மம் பெற்றவர் ஒருவர் இணங்கியொழுகாமையினால் விளைகின்[illegible] ஏதேனும் நிலைமையைத் தணிப்பதற்கு அல்லது அகற்றுவத[illegible]கான தத்துவம்;

(ஊ) அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடு தொடர்பில், இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர் ஒருவரினுல் பேணிவரப்படுவதற்குத் தேவைப்படுத் தப்பட்டவையான எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை, பிற ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்கும் பிரதிகள் எடுப் பதற்கும் ஆன தத்துவம்;

(எ) புவி விஞ்ஞான சார்பு, கனிப்பொருள் மற்றும் சுரங்கம் தோண்டு தல் பற்றிய நுண்ணுய்வுகளை நடத்துவதற்கு ஆன தத்துவம்;

(ஏ) இலங்கையின் கனிப்பொருள் மூலவளங்கள் தொடர்பான தரவு களைச் சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்தல், வெளியிடுதல் ஆகியவற்றுக்கான தத்துவம்;

(ஐ) கனிப்பொருள் மூலவளங்கள் தொடர்பிலான தகவலை வரலாறு சார்ந்ததாகவும் தொல்பொருள் சார்ந்ததாகவும் பேணிக் காத்தலுக்கும் முகாமைசெய்தலுக்குமான நோக்கத்துக்கான வசதிகளை, ஏற்பாடுகளை செய்வதற்கான தத்துவம்.

பணியகத்தின் அலுவலர் களினுலும் அதிகாரமளிக் கப்பட்ட ஆட்களினுலும் மாதிரிகள் எடுக்கப்படல்.

45. பணியகத்தின் அலுவலர்கள் அல்லது பணியகத்தினுல் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் ஆட்கள், ஏதேனும் காணியில் அத்தகைய காணி தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டிருந் தாலும் சரி அல்லவாயினுஞ்சரி நியாயமான எந்நேரத்திலும் நுழைய லாமென்பதுடன் அத்தகைய காணியின்மீது காணப்படும் மண்ணின், கற்பாறையின், கனிப்பொருட்களின் அல்லது துகள்களின் மாதிரிகளை அல்லது மாதிரிப்பகுதிகளை எடுக்கவும் செய்யலாம்.

பணியகத்தின் அலுவலர்கள் முதலானேரின் தத்துவங்கள்.

46. புவிவரலாற்றியல் மற்றும் கனிப்பொருட்கள் நுண்ணுய்வுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பணியகத்தின் அலுவலர்கள் அல்லது பணியகத்தினுல் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் —

(அ) அத்தகைய நோக்கத்துக்கு அவசியமாகின்றவாறுன அத்தகைய ஆட்களோடும், எந்திரத்தொகுதியோடும், சாதனங்களோடும், பொருட்களோடும் எத்தகையதுமான ஏதேனும் காணியில் நுழையுலாமென்பதுடன் இருப்பாட்சியும் செய்யலாம்;

(ஆ) அத்தகைய காணியின் ஏதேனும் பகுதியின் மேற்புறத்தை உடைக்கலாமென்பதுடன், அத்தகைய காணியிலுள்ள, காணி யின்மீதுள்ள அல்லது அத்தகைய காணியின் அடியிலுள்ள மண் ணின், கற்பாறையின் அல்லது கனிப்பொருட்களின் மாதிரிகளை அல்லது மாதிரியின்பகுதிகளை எடுத்துச் செல்லலாம்;

(இ) அத்தகைய காணியை அகழ்ந்தெடுக்கலாம், காணியில் துவார மிடலாம் அல்லது துளையிடலாம் என்பதுடன், அதன்மீது ஏதே னும் கம்பத்தை அல்லது வேறு பொருளை நடலாம்;

(ஈ) அத்தகைய விசாரணையை நடத்துகின்ற நோக்கத்துக்காக, கடந்துசெல்வதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறுன ஏதே னும் காணியில் நுழையலாம் என்பதுடன் அதனூடாகக் கடக்க லாம்;

ஆயின் –

(i) அத்தகைய காணி அரச காணியாக இருந்தாலொழிய, ஏதேனும் காணி தொடர்பில் இப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிக்கும் எண்ணம் பற்றி, அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு குறைந்தபட்சம் பதினான்கு நாட்களுக்கு முன்னர் எழுத்திலான அறிவித்தல் அக்காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்;

(ii) இப்பிரிவினால் சுமத்தப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகித்தலில் இயலுமானவரையில் குறைந்த சேதமும் வசதியீனமும் விளைவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத் தத்துவங்களைப் பிரயோகித்தலின் விளைவாக அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் சேதத்துக்காக நட்டஈட்டுக்கு அவர் உரித்துடையவராகுதலும் வேண்டும்;

(iii) அத்தகைய ஏதேனும் காணியைக் கைவிடுவதற்கு முன்னர், அதன்மீது பயன்படுத்தப்பட்ட எல்லா ஆட்களும், எந்திரத்தொகுதியும், சாதனங்களும்; பொருட்களும் அகற்றப்படல் வேண்டுமென்பதுடன் அதன்மீது செய்யப்பட்ட அகழ்வுகள், அத்துடன் துவாரமிடப்பட்டதான அல்லது துளைக்கப்பட்டதான ஓட்டைகள் யாவும் நிரப்பப்படுதலும் வேண்டும்;

(iv) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் காணி தொடர்பில் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதாயின் அக்காணியில் இப்பிரிவின்மூலம் அளிக்கப்பட்டுள்ளதான தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகித்தலில், நுண்ணாய்வுகள் எதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

அரச காணி நுண்ணாய்வுகள்.

47. பணியகத்தினால் அரச காணிகளில் கனிப்பொருட்களுக்கான நுண்ணாய்வுகள் எதுவும் காணி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுக்காமல் நிறைவேற்றப்படலாகாது.

கனிப்பொருட்களுக்கான உரிமம் ஒன்றின் தேவைப்பாடுகள்.

48. (1) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தலுக்கான உரிமம் எதுவும், நூறு சதுர கிலோமீட்டருக்கு மேற்படுகின்ற அகழ்வு இடப்பரப்பு எதுவும் தொடர்பில் வழங்கப்படுதலாகாது.

(2) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கான உரிமமொன்று, அவ்வுரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்புக்குள், உரிமத்தின் நியதிகளினால் விலக்கப்பட்டுள்ள ஏதேனும் கனிப்பொருள் தவிர்ந்த வேறு எல்லாக் கனிப்பொருட்களையும் அகழ்தலுக்கான புறநீங்கலான உரிமையை உரிமம் பெற்றவருக்கு வழங்குதல் வேண்டும்.

49. ஏதேனும் கனிப்பொருளைத் தோண்டுவதற்கென இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றானது, அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள் உரிமம் பெற்றவர் எல்லாக் கனிப் பொருட்களுக்குமாக சுரங்கம் தோண்டுவதற்கும் அத்துடன் அத்தகைய கனிப்பொருட்களில் வியாபாரம் செய்வதற்கும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் புறநீங்கலாக உரிமை கொண்டிருப்பதற்கு உரித்துடைய வராகச் செய்கிறது.

சுரங்கம் தோண்டுகின்ற உரிமத்தின் கீழ் அவ்வுரிமத்தில் குறித்துரைக் கப்பட்டுள்ள இடப்பரப்பில் எல்லாக் கனிப் பொருட்களை யும் தோண்டு வதற்கு உரிமம் பெற்றவருக் குள்ள உரிமை.

50. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப் பவர், அவரது உரிமத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவையான நடவடிக்கைகள் தொடர்பில் அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், வேறு ஆவணங்களை பணியகத்தில் தேவைப்படுத்தக்கூடியவாறு பேணு தல் வேண்டுமென்பதுடன், பணியகம் காலத்துக்குக்காலம் தேவைப்படுத் தக்கூடியவாறு அத்தகைய செயற்பாடுகள் தொடர்பிலான அத்தகைய விவரத் திரட்டுகளையும் தகவலையும் பணியகத்துக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

உரிமம் வைத் திருப்பவர் புத்தகங்கள் பதிவேடுகள் முதலானவற்றை பேணுதல்.

51. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமமொன்றை வைத்தி ருப்பவர், அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணியின் ஏதேனும் இடப்பரப்புக்குள் நுழைந்து அதனை உடைமையில் எடுத்துக் கொள்வதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஏதேனும் காணி இடப்பரப்பின் சொந்தக்காரர் அத்தகைய காணி இடப்பரப்பை உடமைகொண்டிருக்குமிடத்து, உரிமம் வைத்திருப்பவர், அத்தகைய சொந்தக்காரரின் சம்மதத்துடன் தவிர, இப்பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட உரிமையைப் பிரயோகித்தல் ஆகாது.

உரிமத்தில் குறித்துரைக் கப்பட்டுள்ள இடப்பரப்பினை உடைமையில் கொண்டிருப்ப தற்கு, உரிமத் தினை வைத்தி ருப்பவருக்குள்ள உரிமை.

52. (1) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றினை வைத் திருப்பவர், அவரது உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணியின் சொந்தக்காரருடன் அல்லது இருப்பாட்சியாளருடன் அல்லது அத் தகைய காணி தொடர்பில் வேறு ஏதேனும் உரிமம் வைத்திருப்பவருடன் தலையிடுதலைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அவர்களது தனிப்பட்ட ஆதனத்தைச் சேதப்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளு தலும் வேண்டும்.

உரிமம் வைத்திருப்பவர் காணியின் சொந்தக்கார ருடன் அல்லது இருப்பாட்சி யாளருடன் தலையிடா திருத்தல்.

(2) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப் பவர் இந்த உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி யாக்கப்பட்டதன் மேல் அல்லது அவரது உரிமம் முடிவடையும் தேதி யன்று, இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று, பணியகத்தின் திருப்திக்கேற்ப காணியை புனரமைத்தல் வேண்டும்.

(3) காணி திருப்திகரமான நிலைமைக்குப் புனரமைக்கப்பட்டிருக்கவில்லை என பணியகம் தீர்மானிக்குமிடத்து, உரிமம் வைத்திருப்பவர் விதித்துரைக்கப்பட்ட முறையில் பணியகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகையில் காணிச் சொந்தக்காரருக்கு நட்டவீடு செலுத்தப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

உரிமம் வைத்திருப்பவர் பொறித் தொகுதி இயந்திரத் தொகுதி, முதலானவற்றை எழுப்பலாம் அல்லது நிறுவலாம்.

53. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், அவரது உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான இடப்பரப்பில், வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அமைய பொறித்தொகுதியை, இயந்திரத் தொகுதியை, சாதனத்தை எழுப்பலாம் அல்லது நிறுவலாம்; அத்துடன் கட்டிடங்களை நிருமாணிக்கலாம்.

அவசரகால நிலையொன்றின் சந்தர்ப்பத்தில் பொறித் தொகுதி, கட்டிடங்கள் முதலானவற்றை பயன் படுத்துவதற்கு அரசுக்கும் பணியகத்துக்கும் உள்ள உரிமை.

54. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றினை வைத்திருப்பவரினால் ஏதேனும் காணியின் மீது எழுப்பப்பட்ட, நிருமாணிக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட பொறித்தொகுதி, கட்டிடங்கள், இயந்திரத் தொகுதி, சாதனம் அல்லது வசதிகள் எவற்றையும் அவசரகாலமொன்றின்போது அல்லது ஏதேனும் அவசரமான சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்கு அரசும் பணியகமும் உரித்துடையதாதல் வேண்டும்.

## பாகம் III

### சுரங்கங்களில் உள்ள வேலையாட்களின் சுகாதாரமும் பாதுகாப்பும் நலவுரிமையும்

பெண்களை வேலைக்கமர்த்துதல் மீதான மட்டுப்பாடு.

55. பெண்கள் எவரும், எவ்வயதினராயினும் ஏதேனும் சுரங்கத்தில் எந்நேரத்திலும் நிலத்துக்கடியில் வேலை செய்தலோ, வேலையில் ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

இளம் ஆட்களை வேலைக் கமர்த்துதல் மீதான மட்டுப்பாடு.

56. (1) இளம் ஆள் எவரும், சுரங்கமொன்றில் நிலத்துக்கடியில், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, வேலைசெய்தலோ, வேலையில் ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(2) பதினாறு வயதினைப் பூர்த்தி செய்திராதவரான இளம் ஆள் எவரும், நிலத்துக்கடியில் ஏதேனும் நேரத்தில் வேலைசெய்தலோ, வேலையில் ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(3) பதினாறு வயதினைப் பூர்த்திசெய்துள்ளவரும் சுரங்கமொன்றில் வேலை செய்வதற்கு விரும்புகிறவருமான எவரேனும் இளம் ஆளினது, அல்லது அத்தகைய இளம் ஆளின் பெற்றாரினது அல்லது பாதுகாவலரினது, அல்லது அவ்விளம் ஆள் எந்தச் சுரங்கத்தில் வேலைசெய்வதற்கு விரும்புகிறாரோ அந்தச் சுரங்கத்தின் முகாமையாளரினது விண்ணப்பத்தின் மேல், அவ்விளம் ஆளை மருத்துவ அலுவலர் பரிசோதிப்பதுடன், அவ்விளம் ஆள் பதினாறு வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதுடன், சுரங்கமொன்றில் வேலைசெய்வதற்குத் தகுதியானவர் எனவும் திருப்தியடைவார் எனின், அதற்கிணங்க தகுதிச் சான்றிதழொன்றினை வழங்குதல் வேண்டும்.

(4) பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆளெவரும், அவ்விளம் ஆள் தொடர்பில் தகுதிச் சான்றிதழொன்று, சுரங்கத்தின் முகாமையாளரிடம் முதலில் வைப்பிலிடப்பட்டாலன்றி, சுரங்கத்தில் வேலைசெய்தலோ, வேலையில் ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(5) பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் ஒருவரை வேலையாள் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளும்போது, சுரங்கத்தின் முகாமையாளர், இளம் ஆளுக்கு, (4) ஆம் பிரிவின்கீழ் வைப்பில் இடப்பட்ட தகுதிச் சான்றிதழ் பற்றிய குறிப்பீட்டைக் கொண்டுள்ள டோக்கன் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(6) பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் எவரும், அவர் வேலை செய்துகொண்டிருக்கும்போது, அவருக்கு (5) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட டோக்கனைத் தம்மிடத்தே வைத்துக்கொண்டிருந்தாலொழிய, சுரங்கமொன்றில் வேலைசெய்தலோ அல்லது வேலைசெய்ய அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(7) சுரங்கமொன்றில் வேலைசெய்கின்ற பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் எவரும், பணியகத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரினதும் வேண்டுகோளின்பேரில், எந்நேரத்திலும் மருத்துவ அலுவலரினால் பரிசோதனை செய்யப்படலாம், அத்துடன், அத்தகைய பரிசோதனையின்மேல் சுரங்கத்தில் வேலைசெய்ய அவர் இனித் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால், அவரது தகுதிச் சான்றிதழானது மருத்துவ அலுவலரினால் ஒழிக்கப்படுதலும் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் தமது தகுதிச் சான்றிதழ் ஒழிக்கப்பட்டுள்ளவரான பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் ஒவ்வொருவரும், சுரங்க முகாமையாளரினால் உடனடியாக வேலையிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

57. (1) பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் எவரும், ஏதேனும் சுரங்கத்தில் இரவில் வேலை செய்தலோ அல்லது வேலைசெய்ய அனுமதிக்கப்படுதலோ ஆகாது. இளம் ஆட்களுக்கான வேலை நேரங்கள்.

(2) பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் எவரும் நிலத்துக்குக் கீழ் சுரங்கமொன்றில், எந்த ஒரு நாளிலும், சாப்பாட்டுக்கும் ஓய்வுக்குமான ஒரு மணித்தியாலம் உட்படத் தொடர்ந்து எட்டு மணித்தியாலங்க

ளுக்கு மேல் அல்லது, எவையேனும் ஆறு அடுத்தடுத்த நாட்களில் நாற்பத்துநாலு மணித்தியாலங்களுக்கு மேல் வேலைசெய்யுமாறு கட்டளையிடப்படவோ அல்லது கட்டாயப்படுத்தப்படவோ ஆகாது.

(3) ஏதேனும் நாளொன்றுக்கென, (2) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய எண்ணிக்கையான மணித்தியாலங்களுக்கு, ஏதேனும் நாளன்று, ஏதேனும் சுரங்கத்தில் ஏற்கனவே வேலை செய்துள்ள பதினாறு வயதுக்கு மேற்பட்ட இளம் ஆள் எவரும், அந்நாளன்று வேறு ஏதேனும் சுரங்கத்தில் வேலை செய்தலோ அல்லது வேலைசெய்ய அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

வயது வந்தோருக்கான வேலை நேரங்கள்.

58. (1) வயது வந்த வேலையாள் எவரும், எந்தவொரு நாளிலும், நிலத்துக்குக் கீழே சுரங்கமொன்றில், சாப்பாட்டுக்கும் ஓய்வுக்குமான ஒரு மணித்தியாலம் உட்பட தொடர்ந்து எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் அல்லது அடுத்தடுத்த எவையேனும் ஆறு நாட்களின்போது நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்யுமாறு கட்டளையிடப்படுதலோ அல்லது கட்டாயப்படுத்தப்படுதலோ ஆகாது.

(2) ஏதேனும் நாளொன்றுக்கென, ஓராம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய எண்ணிக்கையான மணித்தியாலங்கள் அளவுக்கு ஏதேனும் நாளன்று, ஏதேனும் சுரங்கத்தில் ஏற்கனவே வேலை செய்துள்ள வயதுவந்த வேலையாளெவரும், அந்நாளன்று வேறு ஏதேனும், சுரங்கத்தில் வேலை செய்தலோ அல்லது வேலைசெய்ய அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

இறங்குவதற்கும் ஏறுவதற்கும் செலவழிக்கப்படும் நேரம்.

59. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சுரங்கமொன்றுக்குள் இறங்குவதற்கும், அதிலிருந்து ஏறுவதற்கும் வேலையாள் ஒருவரினால் செலவழிக்கப்படும் நேரமானது, நிலத்துக்குக் கீழ் சுரங்கத்தில் வேலையில் செலவழிக்கப்பட்ட நேரமாகக் கருதப்படல் வேண்டும்.

சுகாதார மற்றும் மருத்துவ உபகரணம்.

60. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய தரங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இணங்கவும் ஒவ்வொரு சுரங்கத்திலுமுள்ள வேலையாளர்களின் பாவனைக்காகப் பின்வருவன ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் :—

(அ) குடிப்பதற்குப் பொருத்தமான நீரினதும் கழுவுவதற்கான நீரினதும் வழங்கல் ஒன்று;

(ஆ) மலசலகூட வசதி; அத்துடன்

(இ) வரிச்சல்களின், காயக்கட்டுக்களின் அத்துடன் வேறு வைத்திய தேவைப்பாடுகளின் ஒரு வழங்கல்.

(2) சாதாரணமாக வேலையாளர்களை ஊழியத்தில் ஈடுபடுத்தியிருக்கும் ஒவ்வொரு சுரங்க வளவிலும்—

(அ) விபத்தொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் முதலுதவிச் சிகிச்சையின் நோக்கங்களுக்காக, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தூக்குக் கட்டில்கள், மருந்துகள் அத்துடன் துணைக்

கருவிகள்போன்ற அத்தகைய சாதனம் பொருத்தப்பட்டதும் அத்தகைய தரங்களுக்கு உறுதியளிப்பதுமான ஒரு விசேட அறை ஏற்பாடுசெய்யப்பட்டு பேணப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சுரங்கத்தில் தரைக்குக்கீழே ஏதாவது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எல்லாம், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தரத்துக்கு முதலுதவிச் சிகிச்சையின் பயிற்றப்பட்ட நிரந்தரப் பணியாட்தொகுதியின் ஓர் உறுப்பினர் கடமையிலிருத்தல் வேண்டும்.

61. (1) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தினால் அத்தகைய நடவடிக்கைகளைக் கொண்டுநடாத்துவதற்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தரங்களுடனும் நடவடிக்கை முறைகளுடனும் இணங்க அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும். அத்துடன் அத்தகைய உரிமமானது அகழ்ந்தெடுத்தலுக்கு அல்லது சுரங்கம் வெட்டுதலுக்காகவிருக்குமிடத்து, அத்தகைய அகழ்ந்தெடுத்தல் அல்லது சுரங்கம் வெட்டுதல் எந்த நிலத்தில் கொண்டுநடாத்தப்பட்டதோ அந்த நிலத்தை உரிமம் வைத்திருப்பவர் அச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டமுறையில் மீளப் புதுப்பித்தல் அல்லது புனரமைத்தல் வேண்டும். சூழல் பாதுகாப்பு.

(2) இச்சட்டத்தின்கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய உரிமமானது எந்த நிலம் தொடர்பானதோ அந்த நிலத்தின் மேற்பரப்புச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், உரிமம் பெற்றவர் அத்தகைய நிலத்தை அணுகுவதற்கும் அதன்மேல் அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதற்கும் அனுமதித்தலைப், பணியகம் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவினால் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக ஏதேனும் நிலத்தின் மேற்பரப்பு சொந்தக்காரர், அல்லது இருப்பாட்சியாளர் தவறுகின்றவிடத்து, பணியகம் அத்தகைய விடயத்தை அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும். அதன்மேல், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய உரிமம் எந்த நிலம் தொடர்புடையதோ அந்த நிலத்தின் அல்லது அந்த நிலத்தினுள்ள ஏதேனும் அக்கறையின் உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை அங்கீகரிக்கலாம். அத்துடன் அத்தகைய கட்டளை அவ்வாறு வெளியிடப்படுகின்றவிடத்து கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நிலம் அல்லது நிலத்தின் அக்கறை ஒரு பகிரங்க நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கொள்ளவும்படலாம்.

62. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக:— பொருள் கோடல்.

"வயது வந்தவர்" என்பது பதினெட்டு வயதைப் பூர்த்திசெய்த ஓர் ஆள் எனப் பொருள்படும்;

"நாள்" என்பது நள்ளிரவு தொடங்கும் இருபத்திநாலு மணித்தியாலக்காலப் பகுதியொன்று எனப் பொருள்படும்;

"சுரங்கமொன்று தொடர்பான முகாமையாளர்" என்பது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தாலும் சரி இல்லாவிடினும்சரி அத்தகைய சுரங்கத்தின் பயனுறுதியுள்ள பொறுப்பையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும் ஆள் எனப் பொருள்படும்;

"இரவு" என்பது மாலே ஏழு மணி முதல் காலே ஆறு மணிவரையிலான காலப்பகுதி எனப் பொருள்படும்; அத்துடன்

"இளம் ஆள்" என்பது பதினுறு வருடங்களேப் பூர்த்திசெய்துள்ள ஆனல் பதினெட்டு வருடங்களேப் பூர்த்திசெய்யாதுள்ள ஓர் ஆள் எனப் பொருள்படும்.

## பாகம் IV

### பொது

தவறுகள்.

63. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அதன் சார்பில் வழங்கப்பட்ட ஓர் உரிமம் இல்லாது ஏதேனும் கனிப்பொருளே அகழ்த்தெடுக்கின்ற, சுரங்கம் வெட்டி எடுக்கின்ற, பதப்படுத்துகின்ற, கொண்டுசெல்லுகின்ற, வியாபாரம் செய்கின்ற அல்லது ஏற்றுமதி செய்கின்ற;

(ஆ) ஏதேனும் கனிப்பொருளே வியாபாரம் செய்வதற்கு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை வைத்திருக்காத ஓர் ஆளிடமிருந்து அத்தகைய கனிப்பொருளே அறிந்துகொண்டு கொள்வனவு செய்கின்ற;

(இ) இச்சட்டத்தின்கீழ் ஓர் உரிமத்திற்கான ஓர் விண்ணப்பத்தில் அல்லது விண்ணப்பம் தொடர்பாக, அறிந்துகொண்டே பொய்யான கூற்றை அல்லது மோசடியான பிறழ்பகர்வைச் செய்கின்ற,

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை வைத்திருந்துகொண்டு, உரிமத்தினல் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளேக் கொண்டுநடாத்துகையில், அவரினல் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் கனிப்பொருளின் கண்டுபிடித்தலேப் பணியகத்திற்கு அறிவிக்கத் தவறுகின்ற

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதவான் முன்னிலேயிலான சுருக்கமுறையான விசாரணேயின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துவரும் தவறென்றின் விடயத்தில், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனேக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனே ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) (அ) (i) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பேணுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை பேணத் தவறுகின்ற;

(ii) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவத் தவறுகின்ற;

(iii) அவரின் அறிவுக்குப் பொய்யாகவுள்ள ஏதேனும் கூற்றை, ஏதேனும் அத்தகைய புத்தகத்தில், பதிவேட்டில், விவரத்திரட்டில் அல்லது தகவலில் செய்கின்ற;

(iv) அத்தகைய புத்தகத்தில், பதிவேட்டில், விவரத்திரட்டில் அல்லது தகவலில் முக்கிய விவரங்களை வேண்டுமென்றே விட்டுவிடுகின்ற;

இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை வைத்திருக்கின்ற எவரேனும் ஆள்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் எவரேனும் பணியக அலுவலருக்கு அல்லது பணியகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அத்தகைய அலுவலர் அல்லது ஆள் பிரயோகிக்கையில் அத்தகைய அலுவலரை அல்லது ஆளைத் தடுக்கின்ற அல்லது தலையிடுகின்ற;

எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதவான் முன்னிலையிலான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்திற்கு மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் எந்த வேறு ஏதேனும் ஏற்பாடு தொடர்பாக இப்பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தண்டனையெதுவும் குறித்துரைக்கப்படவில்லையோ அந்த ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதவான் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

64. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின் கீழ் எவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அவை தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியான முறையில் விரைவாக, அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகரிக்கப் படாத தேதியிலிருந்து, நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியில் ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கஞ்செய்யப் பட்டதாகக் கருதப்பட்டதோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*அரச காணிகள் கட்டளைச் சட்டத்தைத் (அத்தியாயம் 454) திருத்துதல்.*

65. இப்பிரிவில் "கட்டளைச் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், (454 ஆம் அத்தியாயமான) அரச காணிகள் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் (6) ஆம் பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும்;

(2) அக்கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன் மூலமும் :—

"கடலடியில் சுரங்கம் வெட்டுவதற்கான தத்துவத்தின் மீதான மட்டுப்பாடு.

63. 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட உரிமம் ஒன்று வைத்திருக்கின்ற ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும், கடலடியில் சுரங்கம் வெட்டுதல் ஆகாது.".

(3) அக்கட்டளைச் சட்டத்தின் 64 ஆம் பிரிவில், "கடற்கரையில் உள்ள எவ்விடத்திலிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவ்விடத்திலிருந்தும்" என்னும் சொல்லை இடுவதன் மூலம்,

(4) அக்கட்டளைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவில், "62 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு அல்லது 63 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்குவதற்கு அரசாங்க அதிபர் ஒருவர் மறுக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை அல்லது உரிமத்தை வைத்திருக்கின்ற ஆளினால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிபந்தனையொன்றுக்கு

அமைய வழங்கியிருக்கும் அல்லது 64 ஆம் பிரிவின் கீழ் தடையொன்று வழங்கியிருக்கும் ஏதேனும் விடயத்தில், இன்னலுற்ற ஆளெவரினாலும் அமைச்சருக்கு மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடியதாதல் வேண்டும்." என்னும் எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "62 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கின்ற ஆளினால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிபந்தனையொன்றுக்கு அமைய வழங்கியிருக்கும், அல்லது 64 ஆம் பிரிவின்கீழ் தடையொன்று வழங்கியிருக்கும் ஏதேனும் விடயத்தில், இன்னலுற்ற ஆளெவரினாலும் அமைச்சருக்கு மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடியதாதல் வேண்டும்."

என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்.

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துதல்.

66. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புச் சட்டம், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அச்சட்டத்தில் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பணிப்பாளரினால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணிப்பாளரினால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் முடிவில், பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், கரையோர வலயத்துக்குள் உள்ள

கடற்கரை முனங்கின் அல்லது கடல் அடியில் ஏதேனும் பாகத்தை இருப்பாட்சி செய்வதற்குப் பணிப்பாளரிடமிருந்து அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்று பெறுவதற்குத் தேவைப் படுத்தப்படலாகாது.".

(4) அச்சட்டத்தின் 31 அ. என்னும் பிரிவில். "கரையோர வலயத்துக்குள் ஆளெவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கரையோர வலயத்துக்குள், 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருக்கின்ற ஆள் ஒருவர் தவிர்ந்த ஆளெவரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*கனிப்பொருட்கள் மீது வரிகள் சுமத்துவதற்கு மாகாண சபைகள் மீதுள்ள மட்டுப்பாடுகள்.*

67. மாகாணமொன்றுக்குள் கனிப்பொருட்களுக்காகச் சுரங்கம் வெட்டுவதற்கான உரிமை மீது, அம்மாகாணத்துக்கென தாபிக்கப்பட்ட மாகாண சபையினால் சுமத்தப்படக்கூடிய வரிகள் அவ்வுரிமையைப் பிரயோகிக்கையில் சுரங்கத்தில் தோண்டியெடுக்கப்பட்ட கனிப்பொருட்களின் மொத்த விற்பனைப் பெறுமதியின் 0.5 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

*நீக்கங்கள்.*

68. (210 ஆம் அத்தியாயமான) கற் சுரங்கங்கள், சுரங்கங்கள் அத்துடன் கனிப்பொருட்கள் கட்டளைச்சட்டம், (211 ஆம் அத்தியாயமான) உப்புக்கட்டளைச் சட்டம், 1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கதிரியக்க கனிப்பொருட்கள் சட்டம் அத்துடன் 1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சுரங்கங்கள் அத்துடன் கனிப்பொருட்கள் சட்டம் ஆகியன இத்தால் நீக்கப்படுகின்றன.

*ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

69. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

70. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"வைப்பு" என்பது, புவிஅனல் வண்டல்கள் தொடர்பில் தவிர, கனிப்பொருட்களின் இயற்கையான ஒரு செறிவு எனப் பொருள்படும்.

"அகழ்ந்தெடுத்தல்" என்பது, வண்டல் ஒன்றின் விஸ்தீரணத்தை வரையறுத்து அதன் பொருளாதாரப் பெறுமதியைத் தீர்மானித்தல் எனப் பொருள்படும்.

"புவிஅனல் வண்டல்கள்" என்பது நீர்நிலைகள் கனிப்பொருள் நீர்நிலைகளாக இருந்தாலென்ன அல்லது இல்லாவிட்டாலென்ன சக்தி வழங்கும் மூலமொன்றாகப் பயன்படுத்தப்படக்கூடிய வெப்ப நீர்நிலைகளின் வண்டல்கள் எனப்பொருள்படும்.

"உரிமம்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படும் ஓர் உரிமம் எனப் பொருள்படும்.

"உரிமம் பெற்றவர்" என்பது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றை வைத்திருப்பவர் எனப்பொருள்படும்.

"உள்ளூராதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை எனப் பொருள்படும். அத்துடன் அது, அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அல்லது நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றைப்போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையை உள்ளடக்கும்.

"சுரங்கம் வெட்டுதல்" என்பது எவையேனும் கனிப்பொருட்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றைப் பெறுவதற்கும் மேல்மட்டத்தில் அதன்மேல் அல்லது அதற்குக்கீழ் அகழ்தல் எனப் பொருள்படும்.

"கனிப்பொருள் நீர்நிலைகள்" என்பது வர்த்தக அடிப்படையில் கனிப்பொருட்கள் பிரித்தெடுக்கப்படக்கூடிய நீர்நிலைகள் எனப் பொருள்படும்.

"கனிப்பொருள்" என்பது, நிலமட்டத்தில் அல்லது அதற்குக்கீழ் திடப்பொருளாகவோ, திரவப்பொருளாகவோ அல்லது வாயுப்பொருளாகவோ இயற்கையாகக் காணப்படுகின்ற சுரங்கம் வெட்டி எடுக்கப்படக்கூடிய ஒரு பொருள் எனப் பொருள்படும்; அத்தகைய கனிப்பொருட்களைக் கொண்டுள்ள தாதுப்பொருட்கள் எவையும் அத்துடன் பதப்படுத்துவதன்மூலம் பெறப்படும் அத்தகைய கனிப்பொருட்களின் ஏதேனும் உற்பத்திப்பொருள்; இது பீற்றையும் உப்பையும் உள்ளடக்கும், ஆனால் ஹைட்ரோ கார்பன்களை உள்ளடக்காது.

"அமைச்சர்" என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அத்துடன் கனிப்பொருட்கள் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட, எனப் பொருளாகும்.

"பதப்படுத்தல்" என்பது, பௌதிகவியல் அல்லது இரசாயன முறையில் அல்லது வேறு ஏதாவது பதப்படுத்தும் முறையில் பூர்வாங்கமாகக் கனிப்பொருட்களை நெரித்தல், உருக்குதல், செறியச்செய்தல் அல்லது வேறுவகையாகப் பதனிடுதல் எனப் பொருள்படும்; ஆனால், இது உருக்கிய பிரித்தெடுத்தலையும் சுத்திகரித்தலையும் உள்ளடக்காது. அத்துடன் "பதப்படுத்தல்" என்னும் பதத்துக்கு அதற்கிணங்கப்பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

"செயலாளர்" என்பது, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், எனப் பொருள்படும்.